[திரு. கே.பி. அன்பழகன்] [2005 மார்ச் 18

வரை செல்கின்ற சாலை, அஞ்செட்டி உரிகம் முதல் அத்திநத்தம் வரை செல்கின்ற சாலை, அஞ்செட்டி – நாட்றாம்பாளையம் முதல் கெம்பக்கரை வரை செல்கின்ற சாலை ஆகிய மூன்று சாலைகளும் வனப் பகுதி வழியாகச் செல்வதால், அவற்றை வனத் துறையின் மூலமாகச் செயல்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட உள்ளது. இப்பணிகளுக்கான தொகையினை வனத் துறைக்கு வழங்க வேண்டுமாயின், வனத் துறையினை பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டச் செயலாக்கப் பிரிவாக அங்கீகரிக்க வேண்டும். இதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கும் வரை, தற்காலிகமாக வனத் துறை மேற்கொண்ட பணிகளுக்கான பட்டியல் தொகையினைத் திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக பட்டுவாடா செய்வதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முரளிதரன், இரண்டு கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 170 மற்றும் 171 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 35–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.